# கிராமப்புற மாணவர்களிடையே மொழி கற்றல் கற்பித்தலில் உள்ள சிக்கல்கள் Impediments in Teaching and Learning Language among Rural students

முனைவர் மு.சு.கண்மணி | Dr. M.S. Kanmani

உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை - 630003. அலைபேசி 9842489040.

**ஆய்வுச்சுருக்கம்**

'கிராமப்புற மாணவர்கள்' மொழிப்பாடம் தேர்வு செய்தலில் தொடங்கி, அவர்களின் குடும்பப் பின்னணி, வாழ்வியல் சூழல், கற்றலுக்கான சூழல், கல்விசார் விழிப்புணர்வுகளில் அவர்களுக்கான ஈடுபாடு போன்றவை மொழி கற்றலுக்கு அடிப்படையாக அமைகின்றன. அறிவியல் பாடத்தினைத் தேர்வு செய்யும் மாணவர்களுக்கும் மொழி படிக்கும் மாணவர்களுக்கும் இடையே கல்வி கற்றலில் இருக்கும் வேறுபாடு. அதற்கான காரணங்கள் ஆராயப்படுகின்றன. களத்தில் மாணவர்களிடையே சேகரிக்கப்பட்ட தகவலின் அடிப்படையில் ஆய்வு செய்யப்படுகிறது.

செவ்விலக்கிய மொழிநடையைப் பேசுவதில், வகுப்பெடுப்பதில் ஏற்படுகின்ற இடப்ர்பாடுகள், மொழியைக் கற்பிப்பதில் மேற்கொள்ளப்படும் புதிய உத்திகள், மனச்சோர்வு அடையா வண்ணம் ஊக்கப்படுத்தும் செயல்பாடுகள், மொழியை உச்சரிக்கவும், வாசிக்கவும், பிழையின்றி எழுதவும் செய்முறைக் கூடங்களை உருவாக்குதல். செய்முறைக் கூடங்களில் பயிற்சிகளை அளித்தல் தொடர்பான விதிமுறைகள். மொழியைக் கற்கும் மாணவர்களிடையே மொழியைக் கற்றல் மற்றும் இலக்கியங்களை உருவாக்கும் திறனை மேம்படுத்துதல். இணைய வழி மொழி வகுப்புகள் மூலம் உலக நாடுகளில் உள்ள மாணவர்களை அறிமுகம் செய்தல். அவர்களின் கற்றல் ஆர்வத்தினை அவர்கள் வாயிலாகவே கேட்டறியச் செய்தல்.

இலக்கியக் கற்றலின் இன்றியமையாமையைத் தெளிவுபடுத்துதல். புழங்கு தமிழிலிருந்து செந்தமிழ் நடையைக் கற்கத் தேவையான உளவியல் மற்றும் வகுப்பறைச் சூழலைச் சரிசெய்தல். இலக்கியம் கற்றலின் இடர்ப்பாடுகளைக் களைந்து மொழித்திறனை மேம்படச் செய்தல் போன்றவை இந்த ஆய்வின்வழிக் கண்டறியப்பட்டு முடிவுகள் கொடுக்கப்படுகின்றன. கிராமப்புற மாணவர்கள் இலக்கியம் கற்றலில் வளர்நிலை அடைய இந்த ஆய்வின் முடிவுகள் உறுதுணையாய் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**Abstract**

Language learning is not 'a cup of tea' for the students of rural background. Teaching and learning language to rural students is influenced by multiple factors such as their social and family background, their awareness and involvement in the field of education etc. The research

proposes to do a statistical study of the difference in the learning capability of science and arts major students and also tries to analyze the reasons behind it. Limitations in speaking and understanding the classical Tamil in language classes has also been taken into consideration for research. The students must be made to understand the latest pedagogy of language teaching with ease. The learning capacity of the students with regard to the use of four skills of the language must be enhanced with the usage of language labs. A few decades before the concept of pen friends was rampant among youngsters. The same concept of introducing new students. Each student must have a discussion with a foreign student of his/ her age, about the latest learning methods. This would help to develop interest in language learning. Thus, the researcher proposes to find out new pedagogic methods to enhance the language learning capability of the rural students. These new methods would surely develop the interest among the rural students in learning a language.

**திறவுச்சொற்கள் (Keywords):** கிராமப்புற மாணவர், வாழ்வியல் சூழல், விழிப்புணர்வு, மொழிஅறிவு, பயணநேரம், மனச்சோர்வு, அறிவியல் மாணவர்கள், நகர்ப்புற மாணவர்கள், தீர்வுகள், Rural students, Biological environment, Awareness Language knowledge, Travel Time, Depression, Science students, Urban students, Solutions

## ஆய்வுரை

உயர்கல்வியானது வாழ்க்கைப் பருவத்தின் மிக முக்கியமான காலக்கட்டம். அதில் மொழிப்பாடத்தினைத் தேர்வுசெய்து படிக்கும் மாணவர்களின் கற்கும் திறன் இடம்நோக்கி வேறுபடுகிறது. கிராமப்புற மாணவர்கள், நகர்ப்புற மாணவர்கள் என இருபெரும் பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அதிலும் உள்நோக்கி ஆய்வு செய்தோமே என்றால் பொருளாதாரம் மற்றும் இனம்சார் பின்னடைவுகளைப் பார்க்கலாம். அத்தகைய பின்தங்கிய மாணவர்கள் மொழிப்பாடம் கற்றலில் கற்பித்தலில் ஏற்படும் சிக்கல்களை ஆராய்வதும் அதனைக் களையச் சில வழிமுறைகளைக் கொடுப்பதும் இவ்வாய்வின் நோக்கமாகும்.

## அறிமுகம்

கிராமப்புற மாணவர்கள் இலக்கியக் கல்வி கற்றலில் எழும் சிக்கல்கள் பல்வேறு கோணங்களில் இங்கு ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

1. கிராமப்புற மாணவர்களின் வாழ்வியல்
2. மொழிப்பாடத் தேர்வு
3. மொழியறிவும் இலக்கியப் புரிதல்களும்
4. கல்விசார் விழிப்புணர்வுகள்

## கிராமப்புற மாணவர்களின் வாழ்வியல்

கிராமப்புற மாணவர்களின் வாழ்வியல் சூழல், கல்வி கற்றல் சூழலைக் கட்டமைக்கிறது. பெரும்பான்மையான குடும்பங்களில் கல்வி கற்றவர்கள் இல்லாத நிலை உள்ளது. தன் நிலையை மாற்றப் பிள்ளைகள் உயர்கல்வி கற்றுவிட வேண்டும் என்ற எண்ண உந்துதலே பிள்ளைகளைப் படிக்க வைக்க அடிப்படைக் காரணியாக உள்ளது. கல்வி கற்க ஏற்ற சூழலைத் தர இயலாத குடும்பங்களும் காணப்படுகின்றன. பொருளாதாரச் சிக்கலும் இதில் முக்கியப் பங்கு வகிக்கின்றது. போக்குவரத்துத் தொடர்புகள் குறைவான பகுதிகள்,

போக்குவரத்து ஒரு குறிப்பிட்ட பகுதிக்குமேல் வராது இருத்தல், அதிகாலைப் பயணம், அந்தி நேர வரவு, பயணத்தினால் ஏற்படும் உடல், உளவியல் சோர்வுகள், படித்த பெற்றோர்கள் இல்லாத சூழலில் அவர்களின் கல்வியின்மையைப் பயன்படுத்திக் கொள்ளும் மாணவர்களின் மனநிலை போன்றவை கற்றலின் நிலையை நிர்ணயம் செய்யும் அடிப்படைக் காரணிகளாகும்.

## மொழிப்பாடத் தேர்வு

உயர்நிலைப் பள்ளியில் தேறிய மாணவர்கள் அவர்களின் விருப்ப அடிப்படையில் அல்லாது மதிப்பெண் அடிப்படையில் மேல்நிலைக் கல்வியைத் தேர்ந்தெடுக்கும் முறையே இங்கு நடைமுறையில் உள்ளது. இதில் அறிவியல் பாடப்பிரிவினை மாணவர்கள் தனி விருப்பத் தேர்வாக தேர்ந்தெடுக்கின்றனர். உயிரியல், இயற்பியல், வேதியியல், கணிதம், கணினி பாடப்பிரிவுகளில் மாணவர்களின் தன் விருப்பத் தேர்வாகத்தான் பெரும்பான்மை அமைகின்றது. வணிகவியல் பாடப்பிரிவு அறிவியல் படிப்புக்கு நிகரான மதிப்பீட்டைப் பெற்றுள்ளது. இந்தப் பாடப்பிரிவுகளைத் தேர்ந்தெடுக்க இயலாத அளவு மதிப்பெண் பெற்ற மாணவர்களே பொருளியல், ஆங்கிலம், தமிழ் போன்ற படிப்புகளைத் தேர்ந்தெடுக்கின்றனர். அதிலும் ஆங்கில மொழிப் பாடத்தேர்வு பெரும்பான்மை தன்விருப்பத் தேர்வாகவே உள்ளது. அதற்கு அடுத்த நிலையில் தான் பொருளியல் மற்றும் தமிழ்மொழி அமைகின்றது. அதிலும் குறைந்த மதிப்பெண் பெற்ற கிராமப்புற மாணவர்களின் எளிமையான பாடப்பிரிவாகவும் இன்னும் குறிப்பாக எந்தப் பாடப்பிரிவினைத் தேர்வு செய்வது என்ற அடிப்படைக் கல்வி அறிவு அற்ற பெற்றோர்களின் பிள்ளைகளாகவே தமிழ்மொழிப் பாடப்பிரிவினைத் தேர்ந்தெடுக்கும் மாணவர்கள் நிலை உள்ளது. மாணவர்களின் தன்விருப்பத் தேர்வாக தமிழ்மொழி இல்லை என்பதே இங்குப் பெறப்படுகிறது.

## மொழி அறிவும் இலக்கியப் புரிதல்களும்

மேல்நிலைக் கல்வியில் தமிழ் இலக்கியப் பாடப்பிரிவினைத் தேர்ந்தெடுக்கும் மாணவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் அடிப்படை மொழித்திறன் கொண்டவர்களாக இருக்கின்றனர். செய்யுள் அல்லாத உரைநடைப் பகுதியைக்கூட தெளிவாகவும் முழுமையாகவும் வாசிக்கும் மாணவர்கள் எண்ணிக்கையும் குறைவாகவே உள்ளது. இத்தகைய மாணவர்கள் மத்தியில் தொல்காப்பியம், நன்னூல், யாப்பு போன்ற இலக்கணப் பகுதிகளின் நூற்பாக்களை வாசித்தலும், கேட்டலும், இலக்கியப் பாடல்களை வாசித்தலும், கேட்டலும் என்பதே இங்கு முற்றிலும் முரண்பட்டதாய் அமைகின்றது. கற்பிக்கும் பொழுதுகூட வாசிக்கின்ற இலக்கியத்தைப் புரிந்து கொள்ளும் திறனை மாணவர்கள் பெற இயலாத சூழலிலேயே அவர்கள் கல்வியைத் தொடர்கின்றனர். உச்சரிப்பு தெளிவின்மையால் எழுத்துப் பிழைகள், வாக்கியப்பிழைகள், ஒற்றுப்பிழைகள், ஒருமை பன்மை மயக்கங்கள், கோர்வையற்ற வாக்கியங்கள் போன்று பல பிழைகளைக் கண்ணுற முடிகின்றது. கிராமப்புற மாணவர்களிடையே அடிப்படைக் கல்வி கற்றல் இன்மையும் கல்வி கற்கும் கூடங்களின் தொலைவும், ஆசிரியர்கள் போதுமான அளவு இன்மையும் மேல்நிலைக்கல்வி கற்றலில் அதேநிலை தொடர வழிவகுக்கிறது. அடிப்படைக் கல்வி கற்றலில் ஏற்படும் தொய்வும், தொடர் கண்காணிப்பு இன்மையும் கல்வி கற்கும் கூடங்களின் தொலைவும் ஆசிரியர்களின் எண்ணிக்கை போதுமானதாக இன்மையும் மேற்கல்வி கற்றலில் அதே நிலை தொடர்கிறது. பழகிய கிராமச்சூழலுக்கும், மேல் கல்வி கற்றலுக்கான நகர்ப்புறச் சூழலுக்கும், பருவமுறை

மாற்றமும், பயண நேர அதிகரிப்பும் மாணவர்களிடையே சிந்தனை மாற்றம் ஏற்பட மேலும் ஒரு காரணியாகக் கூறலாம்.

மொழி படித்தலில் அடிப்படைக் கல்வி அறிவே இல்லாத மாணவர்களே இலக்கியப் பாடத்தினைத் தேர்வு செய்யும் நிலை உள்ளது. இச்சூழலில் அவர்களின் மொழிசார் அறிவும், இலக்கியம்சார் புரிதல்களும் மேலும் அவர்களை உளவியல்சார் பாதிப்புகளுக்குள் தள்ளவே எத்தனிக்கின்றன.

இலக்கிய, மொழிப்புலமையையும், அதன் நுட்பங்களையும் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியத்தை உணர்த்துவதைவிடத் தேர்வு நோக்கி அவர்களை நகர்த்துவது இங்குக் கட்டாயமாக உள்ளது. ஆகவே புரியாத மொழியினை மனனம் செய்வது போல் இலக்கியங்களைப் பொருள்புரியாது மனப்பாடம் செய்து தேர்வு எழுதும் மனநிலையே வளர்கிறது.

**கல்விசார் விழிப்புணர்வுகள்**

மொழி படிக்கும் மாணவர்களுக்கு மட்டுமின்றி பொதுவாக அனைத்துக் கல்வி பயிலும் கிராமப்புற மாணவர்களுக்கும் கல்விசார் விழப்புணர்வைத் தருவது இன்றியமையாத ஒன்றாக இருப்பினும் இலக்கியம் படிக்கும் மாணவர்களுக்குக் கல்விசார் விழிப்புணர்வு மிகவும் இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. ஏனெனில் தமிழ்மொழி செம்மொழித் தகுதி பெற்றது. இலக்கியம் படிக்கும் மொழி மெருகேற வேண்டும். மொழி வளர்ச்சியில் இலக்கிய மாணவர்களின் பங்கு இன்றியமையாதது. மொழி என்பதே ஓர் இனத்தின் வரலாற்றை நிலைத்து நிற்கச் செய்யும். ஆகவே இலக்கிய மாணவர்களுக்கு கல்விசார் விழிப்புணர்வு அவசியமானதாகக் கருதப்படுகிறது.

கிராமப்புற மாணவர்களுக்குக் கல்வியின் இன்றியமையாமை விளக்குதல், இலக்கியத்தின் அடிப்படைத் தேவை என்ன என்பதை எடுத்துக்கூறுதல், மொழி வளர்திறனை மேம்படுத்த உச்சரிப்பு முறையினைச் சரிசெய்து பிழையறக் கற்கச் செய்தல், உலகளாவிய மாணவர்கள் தொடர்பான செய்திகளை எடுத்துக் கூறுதல். துறைசார் மாணவர்களின் தரம், அவர்களின் கற்றல் திறன் குறித்த செய்திகளைப் பகிர்தல். இதன் பயனாகக் கிராமப்புற மாணவர்கள் தங்கள் நிலையினை உணர்ந்து அவர்களைப் போல தங்களை உயர்த்திக் கொள்ள வழிவகை செய்தல்.

மேலும் உளவியல் சார் விழிப்புணர்வு மிகவும் அவசிமான ஒன்றாக இங்கே கருதப்படுகிறது. ஏனெனில் பல்வேறு சூழலியல் தடைகளைக் கடந்து கல்விகற்க வரும் மாணவர்களுக்கு இயல்பாகவே மனச்சோர்வு இருக்கும். அதனை நீக்கினால்தான் அவர்களைக் கல்வியில் நாட்டம் உள்ளவர்களாக மாற்றிட முடியும். ஆகவே பல்வேறு தடைகளைத் தாண்டி வாழ்வில் வெற்றிபெற்ற வெற்றியாளர்கள் குறித்த செய்திகளைப் பகிர்தல், தன்னம்பிக்கையை வளர்த்தல், தொடர்முயற்சியினுடைய பலன்களை எடுத்துரைத்தல் அவற்றின் ஊடாக ஆரோக்கியமான முறையில் போட்டி மனப்பான்மையை ஏற்படுத்துதல், இலக்குகள் நிர்ணயம் செய்தல், வெற்றி பெற்றவர்களைப் பாராட்டிச் சிறு பரிசுகள் வழங்குதல் போன்ற உளவியல்சார் செயல்பாடுகளால் அவர்களின் மனத்திட்பத்தை உறுதிபடச் செய்தல் அவசியமானதாகும். அதன்மூலம் மொழியின் மீது அவர்களின் ஆர்வத்தினை அதிகப்படுத்த வழிவகை செய்யலாம்.

**ஆய்வுமுறை**

- அறிவுத்திறன், கற்கும் முறை, பலதரப்பட்ட தனித்திறன்கள், சிறப்புப்பயிற்சி தேவைப்படக் கூடியவர்கள், அவர்களில் வாழ்வியல்சார் பின்னணிகளை ஆய்வுக்குட்படுத்துதல்.
- அவர்கள் ஏற்கனவே கற்ற, கல்வி, தெரிந்து கொண்ட கருத்துகள், புரிந்து கொண்ட முறை, அதனை வளர்க்க எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் ஆகியவற்றின் புதிய செய்திகளை இணைத்துப் புரிதல்களை உருவாக்கச் செய்தல்.
- கற்பித்தலில் புதிய உத்திகளை அறிமுகம் செய்தல். கணினி வழியாக, செய்திக்காட்சிகள், படக்காட்சிகள் மூலமாக தெளிவு பெறச் செய்தல். அதனால் அவர்களின் கற்றல் திறன் மேம்படுதலை ஆய்வு செய்தல்.
- ஆக்கப்பூர்வமான உரைகளை நிகழ்த்திப் புரிந்து கொள்ளச் செய்தல்.
- அவர்களுக்குள் குழுக்களை உருவாக்கி, குழுக்களுக்கு இடையே போட்டி உணர்வுடன் மொழித்திறனை வளர்க்க உதவுதல்.
- கற்றலில் நேரும் இடர்ப்பாடுகளை அவர்கள் வாயிலாகக் கேட்டறிந்து, அதனைச் சரிசெய்த ஒருவரை அவர்கள் ஊடாகவே கண்டறிந்து அவர்களின் அனுபவங்களைப் பகிரச் செய்தல்.
- புதிய கற்றலுக்கான தேடல்களை அவர்களையே கண்டறியச் செய்தல்.
- இணையச் செயலிகள் வாயிலாகப் பல்வேறுபட்ட இலக்கிய மாணவர்களுடன் கலந்துரையாடச் செய்தல். இருவேறுபட்ட சூழலில் இலக்கியம் படிக்கும் மாணவர்களை ஒன்றிணைத்து உரையாடல்களை நிகழ்த்துதல்.
- உலகளாவிய இலக்கிய மாணவர்களிடையே கலந்துரையாடச் செய்து மொழி ஆளுமையை வளர்த்தல். மொழிப்பயிற்சி கூடங்களை உருவாக்கி, மாணவர்களுக்குப் பயிற்சி வழங்கல்.
- தாங்களாகவே சிந்தித்துப் புதிய படைப்புகளை உருவாக்கச் செய்தல்.
- இத்தகைய கற்றல் திறனை ஆய்வுக்கு உட்படுத்தி மதிப்பீடு செய்தல்.

**கலந்துரையாடல்கள்**

மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் செய்திகளின் அடிப்படையில், அவர்களின் கற்றல் செயல்பாடுகள் எவ்வாறு அமைந்திருந்தன என்பதைக் கண்டறிவது ஆய்வில் மிகவும் அவசியமானதாகும்.

இதனை புதிய கற்றலில் ஈடுபட்ட மாணவர்களிடம் கலந்துரையாடுவதின் மூலமும் கண்டறியலாம்.

சில கேள்விகளை நேரடியாகக் கேட்பதன் மூலம் அவர்களின் உச்சரிப்புத்திறன் மற்றும் மொழி ஆளுமைத் திறன்களை வெளிப்படுத்த முடியும்.

கிராமப்புற மாணவர்களின் முந்தைய தேக்க நிலைக்கும், புதிய வழி கற்றலின் வாயிலாகப் பெற்றுக்கொண்ட வளர்நிலைக்கும் உள்ள வேறுபாட்டை அவர்களே உணர்ந்து கொள்ளச் செய்ய வேண்டும்.

மொழிபயில் கூடங்களின் வாயிலாகப் பெற்ற நன்மைகளைக் கேட்டறிய வேண்டும்.